# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க,
## நலன்புரி அனுகூலங்கள் சட்டம்

---

*(2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2002, ஒற்றோபர் மாதம் 25 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : ரூபா 16.75** **தபாற் செலவு : ரூபா 6.75**

## 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க
## நலன்புரி அனுகூலங்கள் சட்டம்

[2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. 26/2002
4702

**எல்லா நலன்புரி நிவாரண அனுகூலங்களினதும் கொடுப்பனவுக்கு அவசியமான சட்டவரையுருவொன்றுக்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்தகைய அனுகூலங்களைப் பெறுபவர்களை இனம்காண்பதற்கு ஒழிவுமறைவில்லாத தெரிவு முறையொன்றை நிர்ணயிப்பதற்கும் ; அத்தகைய அனுகூலங்களை முடிவுறுத்துவதற்கு ஏற்பாடுசெய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவா கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி அனுகூலங்கள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" என்று குறிப்பிடப்படும்). கருக்கப்பெயர்.

2. அமைச்சர் இச்சட்டத்தின் நோக்கத்திற்கு — அலுவலர்களின் நியமனம்.

இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படும் முறையில் நியமிக்கப்படவேண்டியவர்களான,

(அ) நலன்புரி அனுகூலங்கள் ஆணையாளராக இருப்பதற்கென பெயர்குறித்து அல்லது பதவி குறித்து ஆளொருவரையும் (இவர் இதனகத்துப் பின்னர் "ஆணையாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) ; அத்துடன்

(ஆ) சபையின் நான்கு உறுப்பினர்களையும் ; அத்துடன்

(இ) நலன்புரி அனுகூலங்கள் மேலதிக ஆணையாளர்களாகவும், நலன்புரி அனுகூலங்கள் பிரதி ஆணையாளர்களாகவும் மற்றும் நலன்புரி அனுகூலங்கள் உதவி ஆணையாளர்களாகவும் இருப்பதற்கென பெயர்குறித்து அல்லது பதவி குறித்து அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களையும்

நியமித்தல் வேண்டும்.

நலன்புரி அனுகூலங்கள் சபையைத் தாபித்தல்.

**3.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு நலன்புரி அனுகூலங்கள் சபை என அழைக்கப்படவேண்டிய குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்). இதற்கு இச்சட்டத்தின் நிருவாகமும் இச்சட்டத்தால் சபைக்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்களினதும் கடமைகளினதும் பணிகளினதும் பிரயோகமும் நிறைவேற்றுகையும் புரிகையும் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) சபை இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றையுமுடைய கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் மற்றும் அதற்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம்.

சபையின் அமைப்பு.

**4.** (1) சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) சபை உறுப்பினர்களிடையேயிருந்து 2 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட நலன்புரி அனுகூலங்கள் ஆணையாளர் ; இவர் தவிசாளராக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இரண்டாம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நியதிகளின்படி அமைச்சரால் நியமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர்கள்.

(2) சபையின் தவிசாளரும் உறுப்பினர்களும் அமைச்சரால் அரசியலமைப்புப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் நியமிக்கப்படுதல் வேண்டும். (1) ஆம் உட்பிரிவின்கீழ் தவிசாளரையும் நான்கு உறுப்பினர்களையும் நியமிக்கையில் அமைச்சரும் அரசியலமைப்புப் பேரவையும் அத்தகைய ஆட்களின் தெரிவில் பயன்படுத்தப்படவேண்டிய உரைகல் பற்றி உடன்படுதல் வேண்டும்.

(3) ஆணையாளர் சபையின் பிரதான நிருவாக அலுவலராதல் வேண்டும் என்பதுடன், அவர் சபையின் எல்லா முடிவுகளையும் நடைமுறைப்படுத்துவதற்கும் சபையால் அவருக்குக் கையளிக்கப்பட்ட அல்லது இச்சட்டத்தால் அல்லது அதன்கீழ் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

சபையின் பதவிக்காலம் முதலியன.

5. (1) தவிசாளரினதும் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினரதும் பதவிக்காலம் அவர்களது நியமனத் திகதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளாதல் வேண்டும்.

(2) அமைச்சர், மேலே குறித்துரைக்கப்பட்ட பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் அரசியலமைப்புப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன், குறித்துரைக்கப்பட்ட காரணங்களுக்காகச் சபையின் தவிசாளரை அல்லது எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) விடயத்திற்கேற்ப, தவிசாளர் அல்லது உறுப்பினர் ஒருவர், (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அவர் பதவியிலிருந்த அகற்றப்பட்டாலன்றி, தவிசாளராக அல்லது உறுப்பினராக மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(4) தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேதியமும் படிகளும் செலுத்தப்படுதல் வேண்டும்.

(5) சபையானது, அதன் அமைப்பில் ஏதேனும் வெற்றிடமுள்ளமை என்பது எவ்வாறிருப்பினும் செயற்படலாம் என்பதுடன், அதற்கிணங்கச் சபையின் ஏதேனும் செயல் அல்லது முடிபு, அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்றுள்ளது என்ற அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடுள்ளது என்ற காரணத்தினால் மட்டும் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

சபையின் தத்துவங்கள்.

6. சபையானது —

(அ) சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயனளிப்பதற்கும், இச்சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அல்லது அவற்றிற்கு இடைநேர்விளைவான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்வதற்கு ;

(இ) இச்சட்டத்தைத் தகுந்தவிதத்தில் நிர்வகிப்பதற்கு அவசியமானதென சபை கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கும், அகற்றுவதற்கும், ஊதியமளிப்பதற்கும் அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும்,

தத்துவமுடையதாதல் வேண்டும்.

நலன்புரி அனுகூலங்களின் கொடுப்பனவைப் பெறுவதற்குத் தகுதியுடைய ஆட்களைத் தெரிவுசெய்தல்.

7. (1) சபை, இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறான அத்தகைய முறையில் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட விடயப்பொருள்கள் மீது இச்சட்டத்தின் நியதிகளின்படி நலன்புரி அனுகூலங்களின் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதிபெறவேண்டிய ஆட்களைத் தெரிவுசெய்தல் வேண்டும். அத்தகைய தெரிவு பாரபட்சமற்ற முறையிலும் விதித்துரைக்கப்பட்ட தெரிவுக்கான கட்டளைகற்களுக்கிணங்கவும் செய்யப்படுதல் வேண்டும். ஆளெவருக்கும் சாதி, மொழி, மதம், ஆண் பெண் பேதம், அல்லது அரசியல் அபிப்பிராயம் என்பதன் ஏதுக்களின்மீது மாத்திரம் இச்சட்டத்தின் நியதிகளின்படி நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதியுடைய ஆளொருவராகத் தெரிவுசெய்யப்படுதல் மறுக்கப்படுதலாகாது :

ஆயினும், எவ்வாறாயினும் ஏதேனும் பகிரங்க உதவித்திட்டத்தின்கீழ் அல்லது வறுமையைத் தணிப்பதற்கென அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்கென உருவாக்கப்பட்டு அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி மாதாந்தம் அல்லது வேறுவகையில்

உதவிப்பணம் அல்லது கொடுப்பனவொன்றைப் பெறுகின்ற ஆளெவரும், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அவ்வாறு பெறப்பட்ட உதவிப் பணத்தின் அல்லது கொடுப்பனவின் முழு விவரங்களையும் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி கொடுத்துதவப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட தகவலுடன் சேர்த்து ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். சபையானது அத்தகைய அறிவிப்பையும் தகவலையும் பெற்றுக்கொண்டதன் மீது இச்சட்டத்தின் நியதிகளின்படி உதவி பெறுவதற்கு அத்தகைய ஆட்களின் தகுதியை ஆய்ந்தறிவதற்கு ஒவ்வொரு விடயத்தையும் விதித்துரைக்கப்பட்ட கட்டளைகற்களுக்கிணங்க மீளாய்தல் வேண்டும். எவரேனும் ஆளின் தகுதி விதித்துரைக்கப் பட்ட கட்டளைகற்களுக்கிணங்க நிலைநாட்டப்படும் பட்சத்தில், அத்தகைய ஆள், அப்பொழுது ஆரம்பத்தில் பன்னிரண்டு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு இச்சட்டத்தின் நியதிகளின்படி நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதியுடைய ஆளொருவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், ஆணையாளர் அதனைப் பற்றி அத்தகைய ஆளுக்கு அறிவித்தலும் வேண்டும். அத்தகைய காலப்பகுதியின் முடிவில் அத்தகைய ஆள், தகைமையுடைய வராயின் இச்சட்டத்தின் நியதிகளின்படி நலன்புரி அனுகூலத் திட்டமொன்றிற் பிரவேசிப்பதற்கு மீள விண்ணப்பிப்பதற்குத் தகவுடையவராதல் வேண்டும். அத்தகைய ஆளின் பெயர், இச்சட்டத்தின் நியதிகளின்படி நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதியுடைய ஆட்களின் பெயர்கள் அடங்கிய நிரலில் சேர்க்கப்படுதல் வேண்டும் என்பதுடன், ஆணையாளர் அதற்கிணங்க இந்நிகழ்வு பற்றி அத்தகைய ஆளுக்கு அறிவித்தலும் வேண்டும்.

ஆயினும், மேலும் அத்தகைய எவரேனும் ஆள், அத்தகைய நலன்புரி அனுகூலங்களைத் தொடர்ந்து பெறுவதற்குத் தகுதியற்றவர் எனச் சபை தீர்மானிக்கும்பட்சத்தில் அதற்கிணங்க ஆணையாளர் அத்தகைய ஆளுக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பத்தின்மீது விதித் துரைக்கப்பட்ட கட்டளைகற்களுக்கிணங்க, இச்சட்டத்தின் நியதி களின்படி நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவைப் பெறு வதற்குத் தகுதியுடைய ஆளொருவராக அங்கீகரிக்கப்பட்ட ஆளெவரும் அந்நிகழ்வுபற்றி ஆணையாளரால் உடனடியாக

அறிவிக்கப்படுதல் வேண்டும். என்பதுடன், ஏதேனும் பகிரங்க உதவித்திட்டத்தின்கீழ் அல்லது வறுமையைத் தணிப்பதற்கென அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டு அப்போதைக்கு வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அத்தகைய ஆளுக்குச் செய்யப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும் அல்லது அத்தகைய ஆளினால் பெறப்பட்ட எல்லா அனுகூலங்களும் உடனடியாக இல்லாதுபோதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் நியதிகளின்படி நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கென விண்ணப்பிக்கும் ஆளொவ்வொருவரும் விடயத்திற்கேற்ப அத்தகைய ஆளின், அவரது வாழ்க்கைத்துணையின், தங்கிவாழும் பிள்ளைகளின் அல்லது வேறு தங்கிவாழுநர்களின் வருமானம், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பிலான விவரங்களைக் கொடுத்து விதித்துரைக்கப்படக் கூடியவாறான முறையிலும் படிவத்திலும் ஆணையாளருக்கு வெளிப்படுத்துகையொன்றைச் செய்தல் வேண்டும். அத்தகைய வெளிப்படுத்துகையில் தரப்படும் தகவல் அத்தகைய ஆள், விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் நலன்புரி அனுகூலத் திட்டத்தின் நியதிகளின்படி நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதியுடைய ஆளொருவரா என்பதை ஆய்ந்தறிவதற்குச் சபையால் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய விவரங்கள் தொடர்பில் ஏற்பட்ட ஏதேனும் முக்கியமான மாற்றம் பற்றி, அத்தகைய மாற்றம் ஏற்பட்டதிலிருந்து இரண்டு மாத காலப்பகுதிக்குள் ஆணையாளருக்கு அறிவிப்பது (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆணையாளருக்கு அறிவித்துள்ள அல்லது (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வெளிப்படுத்துகையைக் கொடுத்துதவியுள்ள ஆளொருவரின் கடமையாதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் நியதிகளின்படி நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதியுடையவராகத் தெரிவுசெய்யப்பட்ட ஆளொருவர் இதனகத்துப் பின்னர் "இச்சட்டம் ஏற்புடையதாகும் ஆளொருவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழான சபையின் முடிவொன்று இறுதியானதும் முடிவானதுமாதலும் வேண்டும்.

சபையின் தத்துவங்களைக் கையளித்தல்.

8. (1) சபையானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயனுறுதியுடன் நடைமுறைப்படுத்துவதற்கு சபைக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட அலுவலர்களுள் எவருக்கும் அல்லது எவரேனும் மாவட்டச் செயலாளருக்கு, பிரதேசச் செயலாளருக்கு அல்லது கிராம அலுவலருக்கு அல்லது பகிரங்க அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) சபை, அத்தகைய கையளிப்பு எவ்வாறிருப்பினும் அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவத்தை, கடமையை அல்லது பணியைத் தொடர்ந்து பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் அத்துடன் புரியலாம் என்பதுடன் அத்தகைய கையளிப்பை ஏதேனும் நேரத்தில் மீளப்பெறலாம்.

(3) ஒராம் உட்பிரிவின்கீழ் எந்த ஆட்களுக்கு ஏதேனும் தத்துவம் கையளிக்கப்படுகின்றதோ அந்த ஆட்கள், அவ்வாறு அவர்களுக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் புரிகையிலும் பணிப்பாளரின் பொதுவான பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைந்தொழுகுதல் வேண்டும்.

நலன்புரி அனுகூலக் கொடுப்பனவுத் திட்டம்.

9. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எந்த ஆட்களுக்கு ஏற்புடையதாகின்றனவோ அந்த ஆட்களுக்கான நலன்புரி அனுகூலத்தின் எல்லாக் கொடுப்பனவுகளும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நலன்புரி அனுகூலக் கொடுப்பனவுத் திட்டங்களுக்கிணங்கச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) நிகழ்ச்சித்திட்டம் ஒவ்வொன்றும் நிகழ்ச்சித்திட்டமொன்றின் நியதிகளின்படி உதவிபெறுவதற்கான தகுதிக்கான கட்டளைகள், நிகழ்ச்சித்திட்டம் தொடங்கும் தேதி, அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்தின் நியதிகளின்படி அளிக்கப்படவுள்ள நிதி அல்லது வேறு அனுகூலங்கள், நிகழ்ச்சித்திட்டத்தின் நியதிகளின்படி உதவிகள் பெறுவதற்கு ஆட்கள் உரித்துடையவர்களாயிருக்கும் காலப்பகுதி, அத்தகைய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உதவிபெறுபவர்களாயிருக்கும் ஆட்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இயைபானதான வேறு கருமங்கள் என்பவற்றைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) அத்தகைய நிகழ்ச்சித்திட்டம் ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், நிகழ்ச்சித்திட்டம் தொடங்கும் தேதிக்குமுன்னர் அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்படுதலும் வேண்டும்.

(4) அமைச்சர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட நலன்புரி அனுகூலக்கொடுப்பனவுத் திட்டமொன்றை அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் திருத்தலாம். அத்தகைய திருத்தம் ஒவ்வொன்றிற்கும் இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவதாதல் வேண்டும்.

தெரிவுக்குழு.

10. (1) சபையானது, விதித்துரைக்கப்படக்கூடியவாறான நடவடிக்கைமுறையைப் பின்பற்றித் தெரிவுக்குழுக்களை நியமித்தல் வேண்டும்.

(2) ஏழாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ்ச் சபைக்குக் கொடுத்துதவப்பட்ட வெளிப்படுத்துகையில் அடங்கியுள்ள கூற்றுக்களின் செம்மையையும் மற்றும் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி எவரேனும் ஆளினால் சபைக்கு வழங்கப்பட்ட ஏதேனும் அறிவிப்பின் செம்மையையும் பரிசீலனைசெய்து ஆய்ந்தறிவது (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவொன்றின் கடமையாதல் வேண்டும்.

(3) தெரிவுக் குழுவானது அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வெளிப்படுத்துகைகளைப் பற்றிய விசாரணையின் பின்னரும் அத்துடன் அவசியமானதென அது கருதும் அத்தகைய விசாரணைகளைச் செய்தபின்னரும் அதன் அபிப்பிராயப்படி ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நலன்புரி அனுகூலக் கொடுப்பனவுத் திட்டத்தின் நியதிகளின்படி நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாக வேண்டிய ஆட்களின் பெயர்கள் அடங்கிய நிரலொன்றைச் சபைக்கு அனுப்புதல் வேண்டும்.

ஆட்(

11. (1) ஆணையாளர், 10 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நிரலைப் பெற்றுக்கொண்டதன்மீது அது சபையால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அத்தகைய நிரலில் சேர்க்கப்பட்ட பெயர்களுக்கு ஆட்சேபனைகளை அல்லது அத்தகைய நிரலில் சேர்க்கப்படவேண்டிய உரிமைக்கோரிக்கைகளை அத்தகைய

அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் தெரிவிக்குமாறு ஆட்களைத் தேவைப்படுத்தி அத்தகைய பெயர்களின் நிரல்கள் அடங்கிய அத்தகைய அறிவித்தல்களை இரண்டு தினசரிச் செய்தித் தாள்களில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(2) சபை (1) ஆம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு ஏதேனும் மறுமொழி கிடைக்கப்பெற்றதன்மீது விசாரணையொன்றை நடாத்துமாறு ஆணையாளரைத் தேவைப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அதன்பின்னர் விடயத்திற்கேற்ப அத்தகைய ஆட்சேபனையை அல்லது உரிமைக் கோரிக்கையைப் பற்றிய முடிபொன்றைச் செய்தலும் வேண்டும்.

12. (1) நகரசபை, 11 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு மறுமொழியாகப் பெறப்பட்ட ஆட்சேபனைகளை அல்லது உரிமைக் கோரிக்கைகளையிட்டுப் புலனாய்வுகளை நடத்துவதற்கு, அது சார்பில் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கிணங்க மேன்முறையீட்டுக் குழுக்களை நியமித்தல் வேண்டும். மேன்முறை மீட்டுக் குழுக்கள்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மேன்முறை யீட்டுக்குழு ஒவ்வொன்றும், சூழ்நிலைகளில் குழு அவசியமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய விசாரணைகளினதும் புலனாய்வுகளினதும் பின்னர் விடயமொன்று அதற்கு ஆற்றுப் படுத்தப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள் அது தொடர்பில் அதன் முடிபைச் சபைக்குத் தெரிவித்தல் வேண்டும்.

13. (1) சபையால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரும் 7 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தரப்பட்ட தகவலொன்றில் அல்லது 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ்ச் சபைக்கு வழங்கப்பட்ட தகவலில் அடங்கியுள்ள விடயங்களின் செம்மையை ஆய்ந்தறியும் நோக்கத்திற்காக அவசியமானதென அவர் கருதுகின்ற ஏதேனும் மேலதிகத் தகவலைக் கோரலாம். மேலதிகத் தகவல்.

(2) அத்தகைய தகவலைக் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் கொடுத்துதவுவது (1) ஆம் உட்பிரிவின்கீழ் மேலதிகத் தகவலைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் ஆளின் கடமையாதல் வேண்டும்.

பொய்த் தகவலை அளிப்பது தவறொன்றாதல்.

**14.** (1) ஆணையாளர் அல்லது ஆணையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் 7 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்றில் அடங்கியுள்ள தகவல் அல்லது 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் சபைக்கு அளிக்கப்பட்ட தகவல் முற்றாக அல்லது பகுதியளவில் பொய்யானதென நம்புவதற்குக் காரணமாயிருக்குமிடத்து, அந்த ஆளின்பெயர் நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவைப் பெறுவதற்குத் தகுதியுள்ள ஆட்களின் நிரலிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும் எனச் சபைக்கு விதந்துரைக்கலாம்.

(2) சபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதப்புரை கிடைக்கப் பெற்றதன்மீது அவசியமானதென அது கருதுகின்ற அத்தகைய விசாரணையைச் செய்தபின்னர் நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதியுடைய ஆட்களின் நிரலிலிருந்து அத்தகைய ஆளின் பெயரை அகற்றலாம் என்பதுடன், அதனைப் பற்றி அத்தகைய ஆளுக்கு எழுத்தில் அறிவித்தலும் வேண்டும். சபை அத்தகைய ஆளுக்கான ஏதேனும் கொடுப்பனவை உடனடியாக நிறுத்துதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆளுக்கு ஏதேனும் அனுகூலமானது செலுத்தப்பட்டுள்ளவிடத்து, அதனை அதன்சார்பில் குறித் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்குள் சபைக்கு மீளளிக்குமாறு அவரைத் தேவைப் படுத்துதலும் வேண்டும்.

பிரதேசச் செயலாளர்களின் கடமைகள்.

**15.** பிரதேசச் செயலாளர் ஒவ்வொருவரும் அவரது, பிரதேசத்திற்குட்பட்ட தெரிவுக்குழுக்கள், சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அவற்றின் கடமைகளை நிறைவேற்றுகின்றனவா என்பதை உறுதிசெய்யப்படுதல் வேண்டும்.

தவணை தவறுகையின் மீதான நடவடிக்கைமுறை.

**16.** (1) பதின்நான்காம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அவருக்குச் செய்யப்பட்ட கொடுப்பனவுகளை மீளளிக்குமாறு தேவைப்படுத்தப்பட்டுள்ள ஆளெவரும், அவ்வாறு செய்யத்தவறுமிடத்து அத்தகைய தொகையில் தவணைதவறியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தவணை தவறிய ஒருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) ஏதேனும் தொகை தவணைதவறியதாக இருக்குமிடத்து ஆணையாளர், எந்தப் பிரதேசத்தின் நியாயாதிக்கத்திற்குள் தவணை தவறியவர் வசிக்கின்றாரோ அல்லது தவணை தவறியவருக்குச் சொந்தமான அசைவற்ற ஏதேனும் ஆதனம் அமைந்துள்ளதோ, அந்தப் பிரதேசத்தின் நீதிவானுக்குத் தவணை தவறியவரின் பெயர், தவணை தவறியதாகவுள்ள தொகை ஆகிய விவரங்கள் அடங்கிய சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும். ஆணையாளர், சான்றிதழ் வழங்கப் பட்டமை பற்றிய அறிவித்தலொன்றை தவணைதவறியவருக்குச் சேர்ப்பிக்கச் செய்வித்தல் வேண்டும் அல்லது தவணை தவறியவருக்குப் பதவுத் தபாலில் அனுப்புவித்தல் வேண்டும் :

ஆயினும், எவ்வாறாயினும், தவணை தவறியவரால் அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெறாமை, இப்பிரிவின்கீழ் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தொடரப்படும் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைச் செல்லுபடியற்ற தாக்குதல் ஆகாது.

(3) ஆணையாளரால் வழங்கப்பட்ட சான்றிதழில் அடங்கி யுள்ள விவரங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் சரியானவை யாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அது தொடர்பில் இறுதி ஆவணமொன்றாக அமைதலும் வேண்டும்.

(4) நீதிவான், (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி சான்றி தழைப் பெற்றுக் கொண்டதன்மீது அவரது முன்னிலையிற் தோன்றுமாறு தவணைதவறியவருக்கு அழைப்புவிடுத்துச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட பணத்தொகையை அறவிடு வதற்காக ஏன் அவருக்கெதிராக வழக்குத் தொடரப்படக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு அவரைத் தேவைப்படுத்து தலும் வேண்டும். போதிய காரணம் காட்டப்படாதவிடத்து, அத்தகைய தொகையானது, மறியற்றண்டனையால் அல்லாது குற்றப்பணத்தினால் மாத்திரம் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்கு தவணை தவறியவர்மீது நீதிவானால் விதிக்கப்பட்ட குற்றப்பணமாகக் கருதப்படுதல் வேண்டும். அதன்மீது அத்தகைய தவறொன்றுக்கு விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றின் தவணைதவறுகை தொடர்பில் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஒராம் உட்பிரிவின் (அ), (ஆ), (ஐ)

என்னும் பந்திகளைத் தவிர) ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான், அத்தகைய தண்டனைத் தீர்ப்பை விதிக்கும் நேரத்தில் அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளால் அவர் செய்திருக்கக்கூடியதான ஏதேனும் பணிப்பையும் செய்யலாம்.

*சபை வங்கிக் கணக்குகள் முதலியவற்றைப் பேணுதலும் தொழிற்படுத்தலும்.*

**17.** (1) சபை, சட்டத்தின்கீழ் அதன் பணிகளை உரியமுறையில் நிறைவேற்றுவதற்கு அவசியமானதென அது கருதக்கூடியவாறு அத்தகைய வங்கிக் கணக்குகளை ஆரம்பித்துத் தொழிற்படுத்துவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) சபைப்பெயர் அத்தகைய வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து தொழிற்படுத்தக்கூடிய ஆட்களை குறிப்பிடலாம்.

(3) சபை, சபையின் ஏதேனும் மேன்மிகையான பணங்களைச் சாமர்த்தியமானது எனச் சபை கருதும் அத்தகைய முதலீடுகளில் முதலீடு செய்யலாம். சபை அதன் தற்றுணிபின் பேரில் அத்தகைய முதலீடுகளை மாற்றலாம் அல்லது முடிவுறுத்தலாம்.

*சபையின் கணக்குகள்.*

**18.** (1) சபை, சபையின் வரவுசெலவினதும், சொத்துக்கள் பொறுப்புக்களினதும் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களினதும் கணக்குகள் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களைப் பேணச் செய்வித்தல் வேண்டும்.

(2) சபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(3) அரசிலயமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் சபையின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

*சபையின் செலவினங்கள்.*

**19.** சபையின் எல்லாச் செலவினங்களும் ஏதேனும் நலன்புரி அனுகூலத்திட்டத்தின்கீழ் நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவுகளைச் செய்வதற்குத் தேவையான பணங்களும் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

**20.** (அ) ஏழாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின் படி பொய்யான அல்லது பிழையான அல்லது 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பொய்யான அல்லது பிழையான தகவலைக் கொடுத்துதவுகின்ற ;

(ஆ) ஏழாம்பிரின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அவரால் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையில் அல்லது 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான தகவலில் அடங்கியுள்ள முக்கியமான விவரங்களிலான ஏதேனும் மாற்றம் பற்றி ஆணையாளருக்கு அறிவிக்கத் தவறுகின்ற ;

(இ) பதினோராம் பிரிவின் நியதிகளின்படி வெளியிடப்பட்ட அறிவித்தலொன்றுக்கு மறுமொழியாகப் பொய்யான அல்லது பிழையான தகவலைக் கொடுத்துதவுகின்ற ;

(ஈ) எவரேனும் ஆளை இச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றுவதினின்று ஏதேனும் வழியில் தடுக்கின்ற அல்லது அதில் தலையிடுகின்ற அல்லது ஏதேனும் வழியில் தடுக்க அல்லது தலையிட அல்லது அவர்மீது செல்வாக்கைப் பிரயோகிக்க முயலுகின்ற ; அல்லது

(உ) சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதிக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற,

ஆளெவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறையிலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

பகிரங்க அலுவலர்களினாலான தவறுகள்.

**21.** இச்சட்டத்தின்கீழ்த் தமது தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளைப் பிரயோகிக்கையில், நிறைவேற்றுகையில் அல்லது புரிகையில், அறிந்திருந்தும் மற்றும் வேண்டுமென்றும் ஏதேனும் பொய்யான அல்லது பிழையான தகவலின்மீது செயற்படுகின்ற எவரேனும் பகிரங்க அலுவலர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

பிழையான கொடுப்பனவுகளின் விடயத்தில் அறவிடு செய்தல்.

**22.** சபையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது தெரிவுக் குழுவின் உறுப்பினருக்கு அனுப்பப்பட்ட ஆவணமொன்றில் அடங்கியுள்ள ஏதேனும் கூற்றின் உண்மைத்தன்மையை அத்தகைய அலுவலர் அல்லது உறுப்பினர் ஆய்ந்தறியத் தவறியதன் விளைவாகத் தவறான நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவொன்று செய்யப்படுமிடத்து, அத்தகைய தொகை அரசுக்கு வருமதியான தனிசொன்றாக அத்தகைய அலுவலரிடமிருந்து அல்லது உறுப்பினரிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும்.

நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதியுடைய ஆட்களின் நிரலில் பெயர்கள் விட்டுவிடப்படுதலும் சேர்க்கப்படுதலும்.

**23.** நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதியுடைய ஆட்களின் பெயர்கள் அடங்கிய நிரல்களை, சபையின் அபிப்பிராயப்படி விதித்துரைக்கப்பட்ட கட்டளைகள் தொடர்பில் விடயத்திற்கேற்ப நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாகும் அல்லது தகுதியற்றவர்களாகும் ஆட்களின் பெயர்களை அவற்றிற் சேர்ப்பதன்மூலம் அல்லது அவற்றிலிருந்து விட்டுவிடுவதன்மூலம் ஒவ்வோராண்டும் நாளதுவரையாக்கச் செய்விப்பது பிரதேசச் செயலாளர்களின் கடமையாதல் வேண்டும்.

அவசரகால நிவாரணம்.

**24.** ஆணையாளர், இயற்கையான அல்லது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட அனர்த்தம் இடம்பெற்றுள்ளதெனவும் மற்றும் அதனால் பாதிக்கப்பட்ட ஆட்களுக்குத் தற்கால இயல்பினதான அவசரகால நிவாரணம் கிடைக்கச் செய்தல் வேண்டும் எனவும் அபிப்பிராயப்படின், இச்சட்டத்தின்கீழ் செய்யப்படும் நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவுகளைச் சபையின் முன்னங்கீகாரத்துடன் அத்தகைய ஆட்களுக்கு வழங்குதல் வேண்டும். அத்தகைய ஆட்கள் இச்சட்டத்தின் நியதிகளின்படி நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தற்காலிகமாகத் தகுதியுடையவர்களாக வருதல் வேண்டும் :

ஆயினும், இப்பிரிவின் நியதிகளின்படி வழங்கப்படும் அவசரகால நிவாரணம் எந்த விடயத்திலும் ஓராண்டுக் காலத்திற்கப்பால் நீடிக்கப்படுதலாகாது.

அமைச்சர் பணிப்புகளை வழங்கலாம்.

**25.** அமைச்சர், சபையின் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகள் தொடர்பில் சபைக்குக் காலத்துக்குக்காலம் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை எழுத்தில் வழங்கலாம். அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுவது சபையின் கடமையாதல் வேண்டும்.

26. சபையின் முடிபு ஒவ்வொன்றும், தெரிவுக்குழுவொன்றால் சபைக்குச் செய்யப்பட்ட விதப்புரை ஒவ்வொன்றும் அத்துடன் மேன்முறையீட்டுக் குழுவொன்றினால் எடுக்கப்பட்ட முடிவு ஒவ்வொன்றும் இறுதியானதும் முடிபானதுமானதாதல் வேண்டும். சபையின் முடிபுகள் இறுதியானவையாதல்.

27. (1) அமைச்சர் இச்சட்டத்தின் கோட்பாடுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயனளிப்பதற்காகவும் மற்றும் விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கருமத்திற்காகவும் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) ஓராம் உட்பிரிவினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் எல்லாக் கருமங்கள் அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் :—

(அ) நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவுகளுக்கு ஆணையாளருக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கை முறைகளும் மற்றும் பயன்படுத்தப்படவேண்டிய படிவங்களும், (எவையேனுமிருப்பின்) ;

(ஆ) இச்சட்டம் ஏற்புடையதான ஆட்களைத் தெரிவு செய்வதிலும் மற்றும் நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவுகளைச் செய்வதிலும் கடைப்பிடிக்கப் பட வேண்டிய செயற்திட்டம் ;

(இ) நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவின் அளிப்பிற்கு விண்ணப்பிக்கும் ஆட்களால் இணங்கியொழுகப்படவேண்டிய நிபந்தனைகள் ;

(ஈ) இச்சட்டம் எந்த ஆட்களுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆட்கள் தொடர்பில் ஏற்புடையதாகவேண்டிய நிபந்தனைகள் ;

(உ) தெரிவுக் குழுக்களினதும் மேன்முறையீட்டுக் குழுக்களினதும் அமைப்பும் மற்றும் அத்தகைய குழுக்களுக்கு நியமனம் செய்யப்படும் முறையும் அத்தகைய குழுக்களினால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறையும் ;

(ஊ) இச்சட்டம் ஏற்புடையதாகும் ஆளொருவராக எவரேனும் ஆளின் பெயர் 11 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட நிரலில் சேர்க்கப்பட்டுள்ளமையை ஆட்சேபிப்பதிலும் அத்துடன் நிரலில் சேர்க்கப்படுவதற்கு ஆட்களினால் செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கைகளிலும் கடைப்பிடிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறை ;

(எ) செய்யப்பட்ட வெளிப்படுத்துகைகளில் அடங்கியுள்ள கூற்றுக்களின் செம்மைத்தன்மையை ஆய்ந்தறியத் தவறியமைக்காகச் சபையின் அலுவலர்களுக்கும் குழுக்களின் உறுப்பினர்களுக்கும் எதிராக விசாரணைகளை மேற்கொள்ளும் முறையும் மற்றும் நடாத்தும் முறையும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதிப்படக்கூடியவாறு விரைவில் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டு வரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட தேதியைப் பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

**28.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலன்றி —

"அரசியலமைப்புப் பேரவை" என்பது, அரசியலமைப்பின் VIIஅ என்னும் அத்தியாயத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவை என்று பொருள்படும் ;

"அமைச்சர்" என்பது, இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்று பொருள்படும் ;

"நலன்புரி அனுகூலத்தின் கொடுப்பனவு" என்பது, இச்சட்டம் ஏற்புடையதாகின்றவரும் நலன்புரி அனுகூலத் திட்டத்தின் நியதிகளின்படி அதற்கு உரித்துடையவராகின்றவருமான ஆளொருவருக்குச் செய்யப்படும் ஒரு கொடுப்பனவு என்று பொருள் படும் ;

"நலன்புரி அனுகூலத் திட்டம்" என்பது, சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் வகுத்துருவாக்கப்பட்ட ஒரு செயற் றிட்டம் என்று பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், இச்சட்டம் மேலோங்கி நிற்றல்.

**29.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், வறுமையைத் தணிப்பதற்கும் அல்லது நலன்புரி நிவாரண அனுகூல மொன்றாக எந்த வேறு ஏதேனும் ஒத்த நோக்கத்துக்கென வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் படி அல்லது கொடுப்பனவு செய்யப்படுகின்றதோ அந்த வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்டவாறான ஏதேனும் அத்தகைய சட்டத்தில் ஏதேனும் கருமத்தைக் கையாள்வதற்கு ஏற்பாடெதுவும் அல்லது பயனுள்ள ஏற்பாடெதுவும் இல்லாதவிடத்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய கருமம் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**30.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.